**நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம். மதுரை.**

**முன்னிலை: திரு.S. கல்யாணமாரிமுத்து,**
**நீதித்துறை நடுவர் எண்.2, மதுரை.**

**2023-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 01 ஆம் நாள் புதன்கிழமை**
**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண்.2123/ 2022.**
**TNMDO70118152022**
**********

அரசுக்காக, சார்பு ஆய்வாளர்,

மதிச்சியம் சட்டம் ஒழுங்கு காவல்நிலையம், மதுரை.

காவல்நிலையக் குற்ற எண்.144 / 2022.

இ.த.ச.பிரிவு- 294(b),323,324,506(ii) IPC.

....குற்றமுறையீட்டாளர்.

**-எதிர்-**

1. ஜெயமுருகன் என்ற ஜாம்,
   த/பெ. பாலமுருகன்.
2. புஷ்பா என்ற புஷ்பவள்ளி,
   க.பெ. பாலமுருகன்.

...எதிரிகள்.

| | | |
|---|---|---|
| 1 | **ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.2123/ 2022.** | |
| 2 | காவல்நிலைய பெயர்<br>குற்ற எண் | மதிச்சியம் சட்டம் ஒழுங்கு காவல்நிலையம், மதுரை.<br>காவல்நிலையக் குற்ற எண்.144 / 2022. |
| குற்றம் சாற்றப்பட்டவர் குறித்த விபரம் | | |
| 3 | எதிரிகளின் பெயர்: | 1. ஜெயமுருகன் என்ற ஜாம்,<br>2. புஷ்பா என்ற புஷ்பவள்ளி, |
| 4 | எதிரிகளின் தந்தை பெயர்: | த/பெ. பாலமுருகன்.<br>க.பெ. பாலமுருகன். |

| | | |
|---|---|---|
| 5 | தொழில் | கூலி<br>கூலி |
| 6 | முகவரி | 1. ஜானகி அம்மாள் காம்பவுண்ட், தயாக்கர பிள்ளையார் கோவில் தெரு, வைகை வடகரை, ஆழ்வார்புரம், மதுரை.<br>2. கதவு எண்.13ஏ, வைகை வடகரை, ஆழ்வார்புரம், மதுரை. |
| 7 | வயது | 19/2022<br>41/2022 |
| | தேதி விபரங்கள் | |
| 8 | சம்பவம் | 28.03.2022 |
| 9 | புகார் | 29.03.2022 |
| 10 | கைது தேதி | 1வது எதிரி 29.03.2022<br>2வது எதிரி ---- |
| 11 | பிணை விடுப்பு | 1வது எதிரி 19.05.2022<br>2வது எதிரி 12.04.2022. |
| 12 | Committal: | N.A. |
| 13 | விசாரணை துவக்கம் : | 20.07.2023 |
| 14 | விசாரணை முடிவு : | 27.10.2023 |
| 15 | தண்டனை (அ) ஆணை : | **முடிவாக, எதிரிகள் பிரிவுகள் 294(b),323,324,506(ii) IPC. படி குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து குவிமுச பிரிவு 248(1)-இன்கீழ் மேற்படி குற்றச்சாட்டிலிருந்து இந்நீதிமன்றம் எதிரிகளை விடுதலை செய்து** |

| | | |
|---|---|---|
| | | தீர்ப்பளிக்கிறது. இந்த வழக்கில் அரசுதரப்பு வழக்கு சொத்தான R.P.R No.695/22ல் தாக்கல் செய்யப்பட்ட சிறிய கல் ஒன்று. பயனற்றது என்பதால் அரசுதரப்பில் மேல்முறையீடு செய்யவில்லை என்றால், மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு புலன் விசாரணை முகமையிடம் கொடுத்து அழிக்க உத்தரவிட்டும், அரசு மேல்முறையீடு செய்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுப்படி செயல்பட இதன்படி உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் எழுதிகொடுத்த பிணைமுறி ஆவணம் மேல்முறையீட்டு காலத்திற்குபின் ரத்து செய்து உத்திரவிடப்படுகிறது. |
| 16 | தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிக்கு சார்பு செய்தல் : | இல்லை |
| Case Summary | | |
| 17 | Period of Remand of the accused: | 1வது எதிரி 29.03.2022 to 19.05.2022 |
| 18 | Date of filing of the final report : | 29.08.2022 |
| 19 | Date of Questioning under Sections 240, 246 & 251 Cr.P.C: | 20.07.2023 |
| 20 | Miscellaneous Petition and their results : | -- |
| 21 | Date of examination in chief and cross : | P.W. / Chief / Cross:<br>1. 17.10.2023 17.10.2023<br>2. 17.10.2023 17.10.2023<br>3 17.10.2023 17.10.2023<br>4 25.10.2023 25.10.2023 |
| 22 | Date of examination accused under Section 313 Cr.P.C : | 27.10.2023 |

Nested table for item 21:

| P.W. | Chief | Cross |
|---|---|---|
| 1. | 17.10.2023 | 17.10.2023 |
| 2. | 17.10.2023 | 17.10.2023 |
| 3 | 17.10.2023 | 17.10.2023 |
| 4 | 25.10.2023 | 25.10.2023 |

| | | |
|---|---|---|
| 23 | Details of abscondence of accused and his appearance/production: | Nil |
| 24 | Grant of stay by Superior Court and the results thereof : | Nil |
| 25 | காலதாமதத்திற்கான காரணம் :<br><br>மேற்படி வழக்கில் காலதாமதம் ஏற்படவில்லை. | |

இந்த வழக்கு 17.11.2022 ம் தேதியில் இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை.2 திரு. இசைக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள்தரப்பில் வழக்கறிஞர் திரு. அய்யப்பராஜா, அவர்கள் ஆஜராகியும், இருந்தநிலையில் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இறுதி விசாரணைக்கு கொணரப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

இந்த வழக்கு மதிச்சியம் சட்டம் ஒழுங்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளரால், காவல்நிலைய குற்ற எண் 144/2022. சட்டப்பிரிவுகள் 294(b),323,324,506(ii) இ.த.ச வாக பதிவு செய்யப்பட்ட முதல்தகவல்அறிக்கையில் குவிமுச பிரிவு 173 ன் படி குற்றஇறுதிஅறிக்கை கடந்த 29.08.2022 அன்று மதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 17.11.2022 ம் தேதி சி.சி நம்பர் 2123-2022 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்ட வழக்கு ஆகும்.

1) **குற்றஇறுதிஅறிக்கையின் சுருக்கம்:**

இவ்வழக்கின் வாதியின் வீட்டுக்கு பக்கத்து வீட்டில் குடியிருக்கும் புஷ்பா என்ற புஷ்பவள்ளி அவர்களது மகன் ஜெயமுருகன் இருவரும் அடிக்கடி வாதியுடன் வம்பிழுத்து சண்டை போட்டு வந்துள்ளார்கள். இந்நிலையில் 28.03.2022ம் தேதி இரவு 8.45 மணியளவில் வாதியின் மகன் சூர்யா வீட்டு வாசலில் உட்கார்ந்து செல்போன் பார்த்துக்கொண்டிருந்த போது அங்கு வந்த எதிரி ஜெயமுருகன் அவரது நண்பன் இளவர் முகிலனும் வாதியின் மகன் சூர்யாவிடம் செல்போனை கேட்டதற்கு சூர்யா கொடுக்க முடியாது என்று சொன்னதால் எதிரி ஜெயமுருகனும், இளவர் முகிலனும் சூர்யாவை கையால் அடித்து வீட்டிற்குள் தள்ளிவிட்டுள்ளார்கள். அதனை பார்த்த வாதி ஏம்பா அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு வாதியை பார்த்து பொது இடத்தில் வைத்து இளவர் முகிலன் ஏ போடி ஓத்தா புண்டை உன்னை கொன்றுடுவேண்டின்று சொல்லி கையால் வாதியை கீழே தள்ளிவிடவும், பிறகு வாதி எழுந்து எதிரி ஜெயமுருகனின் அம்மா புஷ்பா என்ற புஷ்பவள்ளியிடம் உன் மகன் இவ்வாறு சண்டை போடுகிறான் நீ கண்டித்து வை என்று சொல்லவும், அதற்கு எதிரியான புஷ்பா என்ற புஷ்பவள்ளி வாதியை முடியை பிடித்து இழுத்து கையால் அடித்து கீழே தள்ளிவிட்டு ஏன்டி தேவிடியா என்ன தைரியம் இருந்தா என் மகனை குறை சொல்லுவ என்று எதிரி ஜெயமுருகனை கூப்பிட்டு அவனையும், அவ குடும்பத்தையும் அடித்து கொல்லுடானு சொல்லவும் எதிரி ஜெயமுருகன் ரோட்டில் கீழே கிடந்த கல்லை எடுத்து வாதியை நோக்கி எறிந்து முன் தலையில் சிறிய ரத்தக்காயத்தை ஏற்படுத்திய குற்றமுறு செய்கையும் புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகளான ஜெயமுருகன், புஷ்பா என்ற புஷ்பவள்ளி இருவரும் சட்டபிரிவுகள் 294(b),323,324,506(ii) இ.த.ச பிரகாரம் தண்டிக்கத்தக்கவராகிறார்கள் என மதிச்சியம் சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கில் இளவர் முகிலன் மீது பிரிவு 294(பி), 323,506(2)இ.த.ச பிரகாரம் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து இளஞ்சிறார் நீதிகுழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3) குற்ற இறுதிஅறிக்கையில் போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் ஆஜர் ஆன பின்பு குவிமுச பிரிவு 207-இன்படி வழக்கின் ஆவணங்கள் இலவசமாக எதிரிகளுக்கு வழங்கப்பட்டு போதிய அவகாசம் கொடுத்து பிரிவு 294(b),323,324,506(ii) இ.த.ச ன் கீழான குற்றம் குறித்து குற்றச்சாட்டு வனைந்து எதிரிகள் மீது குற்ற முகாந்திரம் எடுத்துரைத்து விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள். எதிரிகள் வழக்கை எதிர் கொள்வதாக தெரிவித்ததன்பேரில் அரசுதரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் வாயிலாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியிடப்பட்டது.

5) **அரசுதரப்பில் சாட்சிகளிலிருந்து வெளிப்படும் வழக்கு சங்கதிகள்.**

5.1 இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1. திரு. பழனியம்மாள ஆவார், சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் அசா.1ன் மகன் அவர்கள் வீட்டு வாசலில் இருந்தபோது இரவு 7.00 மணியளவில் யாரோ சில நபர்கள் அடித்துள்ளார்கள். சத்தம் கேட்டு வந்த அசா.1 மீதும் கல் எறிந்துள்ளார்கள். அசா.1 இது தொடர்பாக மதிச்சியம் காவல்நிலையம் சென்று தெரிவித்துள்ளார்.

5.2- அசா.1 கொடுத்த அ.சா.ஆ,4 புகாரை பெற்ற சார்பு ஆய்வாளர் மாணிக்கவாசுகி கடந்த 21.09.2022ம் தேதி 10.00 மணிக்கு நிலைய பொறுப்பில்

இருந்தபோது புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 144-2022 பிரிவு 294(b), 323, 324, 506(2) இதசவாக அசாஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செயதுள்ளார். புகார், முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து ஒரு நகலை சார்பு ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றையதினமே 10.40 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் அசா.3 முத்து, அழகுவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பாாவையிட்டு அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அசாஆ.6 மாதிரி வரைபடம் தயாரித்துள்ளார். சம்பவயிடத்தில் அசாஆ.7 அத்தாட்சியின் பேரில் சிறிய கல் ஒன்று கைப்பற்றியுள்ளார். பின்னர் சாட்சிகள் அசா.1 பழனியம்மாள், அசா.2 சூர்யா, அசா.3 முத்து, அழகுவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5.3 வழக்கின் எதிரியை 29.03.2022ம் தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். கைப்பற்றப்பட்ட வழகது சொத்தை அசாஆ.8 படிவம் 91 வாயிலாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். காயம்பட்ட நபருக்கு சிகிசசை வழங்கிய மருத்துவர் கலைவாணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர், சார்பு ஆய்வாளர் விசாரணையில் 29.03.2022ம் தேதி பழனியம்மாள் என்ற பெண்நபர் சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்டார் என்றும், நோயாளி தன்னை 28.03.2022ம் தேதி அவர் வீட்டருகே வைத்து இனம்தெரிந்த நபர் ஒருவர் இரவு 9.00 மணிக்கு கல்லால் தாக்கியதாக தெரிவித்துள்ளார். அவருக்கு தலைப்பகுதியில் ஒரு தையலிடப்பட்ட காயம் இருந்ததாக தெரிவித்துள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என சான்று வழங்கியுள்ளார். விபத்து பதிவேடு அசாஆ.9 ஆகும். சார்பு ஆய்வாளர் விசாரணையில் எதிரிக்கு எதிராக குற்றம் புலனாகியதால் விசாரணை

முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மாணிக்கவாசுகி பணிமாறுதல் பெற்று சென்றிருப்பதால் சார்பு ஆய்வாளர் அசா.4 முத்துக்கிருஷ்ணன் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

6) **<u>அரசுதரப்பு சாட்சிய விசாரணைக்கு பின்னர், எதிரியை குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டப்பிரிவு 313(1)(ஆ)-இன்படி வினவிய விவரம்.</u>**

அரசுதரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்ட பின்னிட்டு குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டப்பிரிவு 313(1)(ஆ)ன்படி வழக்கின் எதிரிகளுக்கு பாதகமான அரசுதரப்பு சாட்சி விசாரணையில் அமைந்த குற்ற சாட்சியங்கள் பொறுத்து எதிரிகளுக்கு எடுத்துரைத்து வினவிய போது எதிரிகள் அவைகளை மறுத்துரைத்துள்ளார்கள். எதிரிகள்தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை.

7) **<u>அரசுதரப்பு வாதம்</u>**

அரசு தரப்பில் தோன்றிய கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரிகள் வாதியை அசிங்கமாக பேசி, அடித்து காயப்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளார்கள் என்பது சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், காவல்துறை விசாரணையில் சம்பவம் குறித்து அ.சா.1 மற்றும் அசா.2 சாட்சிகள் வாக்குமூலம் அளித்துள்ள நிலையில், தற்போது சாட்சிகள் எதிரிகளுடன் சமாதனம் செய்துகொண்டு உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே இந்த எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் வாதம் வைத்தார்.

8) **<u>எதிரிதரப்பு வாதம்</u>**

எதிரிகள் தரப்பில் தோன்றிய கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது அரசுதரப்பு வழக்கின்படி ஒரு சம்பவமே நிகழவில்லை என்றும், புகார்தாரரான அ.சா.1 மற்றும் கண்ணால் கண்ட சாட்சிகள் ஆகியோர் அரசுதரப்பிற்கு முரண்பட்டு

சாட்சியமளித்துள்ளார்கள் என்றும், காயம்பட்ட சாட்சியான அ.சா.1 எதிரிகள் தன்னை தாக்கவில்லை என்று கூறி சாட்சியமளித்துள்ளார் என்றும், எவ்வாறோ ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகளுக்கு எதிராக பொய்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசுதரப்பில் சந்தேகத்திற்கப்பால்பட்டு நிரூபிக்கவில்லை என்றும் இந்த எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதம் வைத்தார்.

9) இவ்வழக்கில் அரசுதரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள சட்டபிரிவு 294(b),323,324,506(ii) IPC. ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்?

## தீர்வு

10) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. 28.03.2022ம் தேதி இரவு 8.45 மணியளவில் வாதியின் மகன் சூர்யா வீட்டு வாசலில் உட்கார்ந்து செல்போன் பார்த்துக்கொண்டிருந்த போது, அங்கு வந்த எதிரி ஜெயமுருகன் அவரது நண்பன் இளவர் முகிலனும் வாதியின் மகன் சூர்யாவிடம் செல்போனை கேட்டதற்கு, சூர்யா கொடுக்க முடியாது என்று சொன்னதால் எதிரி ஜெயமுருகனும், இளவர் முகிலனும் சூர்யாவை கையால் அடித்து வீட்டிற்குள் தள்ளிவிட்டதாகவும், அதனை பார்த்த வாதி ஏம்பா அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு வாதியை பார்த்து பொது இடத்தில் வைத்து இளவர் முகிலன் ஏ போடி ஓத்தா புண்டை உன்னை கொன்றுடுவேண்டின்று சொல்லி கையால் வாதியை கீழே தள்ளிவிடவும், பிறகு வாதி எழுந்து எதிரி ஜெயமுருகனின் அம்மா புஷ்பா என்ற புஷ்பவள்ளியிடம் உன் மகன் இவ்வாறு சண்டை போடுகிறான் நீ கண்டித்து வை என்று சொல்லவும், அதற்கு எதிரியான புஷ்பா என்ற புஷ்பவள்ளி வாதியை முடியை பிடித்து இழுத்து கையால் அடித்து கீழே தள்ளிவிட்டு ஏன்டி தேவிடியா என்ன

தைரியம் இருந்தா என் மகனை குறை சொல்லுவ என்று எதிரி ஜெயமுருகனை கூப்பிட்டு அவனையும், அவ குடும்பத்தையும் அடித்து கொல்லுடானு சொல்லவும், எதிரி ஜெயமுருகன் ரோட்டில் கீழே கிடந்த கல்லை எடுத்து வாதியை நோக்கி எறிந்து முன் தலையில் சிறிய ரத்தக்காயத்தை ஏற்படுத்திய குற்றமுறு செய்கையும் புரிந்துள்ளார்கள் என மதிச்சியம் சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எதிரிகள் தரப்பில் அந்த குற்றச்சாட்டு மறுக்கப்பட்டுள்ளது.

11) எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்துள்ளதால், குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் சுமை அரசுதரப்பை சாரும். அரசுதரப்பை நிரூபிக்கும் வகையில் குற்ற சம்பவம் குறித்தும் புகார் வழங்கியது குறித்தும் சாட்சியமளிக்க அ.சா.1ம், சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி சாட்சியமளிக்க அ.சா.2ம், பார்வை மகஜர் பற்றி சாட்சியமளிக்க அ.சா.3ம், புலன்விசாரணை குறித்து சாட்சியமளிக்க அ.சா.4ம் அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

12) இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியும், புகார்தாரரும் ஆன அ.சா.1 தனது சாட்சியத்தில், அரசுதரப்பு வழக்கிற்கும் அவர் வழங்கியதாக சொல்லப்படும் புகாருக்கும் முற்றிலும் முரண்பட்டு, ஆஜர் எதிரிகள் தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தங்கள் வீட்டருகே குடியிருந்து வருகிறார்கள் என்றும், தங்களுக்கும் அவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை கிடையாது என்றும், சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் தனது மகன் தங்கள் வீட்டு வாசலில் இருந்தபோது, இரவு 7.00 மணியளவில் யாரோ சில நபர்கள் அடித்துவிட்டதாகவும், சத்தம் கேட்டு வந்த தன் மீதும் கல் எறிந்துவிட்டதாகவும், இது தொடர்பாக மதிச்சியம் காவல்நிலையம் சென்று தெரிவித்ததாகவும், சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் தான் தாக்கியிருக்க கூடும் என்று சொன்னதாகவும், அவர்கள் தாங்கள் சொல்லும்படி எழுதினால்தான் நடவடிக்கை

எடுக்கப்படும் என்று சொன்னதாகவும், போலிசார் சொல்ல சொல்ல தனது மகன் எழுதியதாகவும், அதில் உள்ள விபரங்களை தான் சொல்லவில்லை என்றும், புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் தன்னுடையது என்றும், புகாரில் உள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும், எதிரிகள் தன்னை தாக்கவில்லை என்பதை தெரிந்து கொண்டதாகவும், மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும் சாட்சியமளித்து அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆனால் அவரது குறுக்கு விசாரணையில் எதிரிகளுக்கெதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் பெறப்படவில்லை. அசா.1ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில் சந்தேகத்தின் அடிப்படையிலேயே அவர் காவல்நிலையத்தில் தெரிவித்துள்ளது தெரியவருகிறது. மேலும் புகார் சங்கதிகள் தனக்கு தெரியாது என்றும், எதிரிகள் தன்னை தாக்கவில்லை என்றும் அசா.1 தெரிவிக்கும்நிலையில் உண்மையில் புகார் அசா.1 தெரிவித்ததின்அடிப்படையில் எழுதப்பட்டதா அல்லது அசா.1 சாட்சியமளித்த வகையில் போலிசாரால் தெரிவிக்கப்பட்டு எழுதப்பட்டதா, எதிரிகள் தான் அசா.1ஐ தாக்கினார்களா என்ற சந்தேகம் எழுகிறது. அசா.1 எதிரிகளை குற்றசம்பவத்துடன் தொடர்புபடுத்தி சாட்சியமளிக்கவில்லை.

13) சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், எதிரிகள் பிரச்சனையை துவங்கியது தொடர்பாக தெரிவிக்கவும் விசாரிக்கப்பட்ட அசா.2 சூர்யா தனது சாட்சியத்தில், அரசுதரப்பு வழக்கிற்கும் அசா.1ன் புகாருக்கும் முற்றிலும் முரண்பட்டு, ஆஜர் எதிரிகள் தங்கள் வீட்டருகே குடியிருந்து வருகிறார்கள் என்றும், தங்களுக்கும் அவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை கிடையாது என்றும், சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் தான் தங்கள் வீட்டு வாசலில் இருந்தபோது இரவு 9.00 மணியளவில் யாரோ சில நபர்கள் கூட்டமாக வந்து அடித்துவிட்டதாகவும், சத்தம்

கேட்டு வந்த தன் அம்மா மீதும் கல் எறிந்துவிட்டதாகவும், இது தொடர்பாக மதிச்சியம் காவல்நிலையம் சென்று தெரிவித்ததாகவும், சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் தான் தாக்கியிருக்க கூடும் என்று சொன்னதாகவும், அவர்கள் தாங்கள் சொல்லும்படி எழுதினால்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதாகவும், போலிசார் சொல்ல சொல்ல தான் எழுதியதாகவும், அதில் உள்ள விபரங்களை தான் சொல்லவில்லை என்றும், புகாரில் உள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையது தான் என்றும், புகாரில் உள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும், எதிரிகள் தன்னை தாக்கவில்லை என்பதை தெரிந்து கொண்டதாகவும், மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும் சாட்சியமளித்து அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அந்த குறுக்கு விசாரணையில் அரசுக்கு ஆதரவாகவும், எதிரிகளுக்கெதிராகவும் எந்த சாட்சியமும் பெறப்படவில்லை.

14)அசா.2ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில் சந்தேகத்தின் அடிப்படையிலேயே அவர் காவல்நிலையத்தில் தெரிவித்துள்ளது தெரியவருகிறது. மேலும் புகார் சங்கதிகள் தனக்கு தெரியாது என்றும், எதிரிகள் தன்னை தாக்கவில்லை என்றும் அசா.2 தெரிவிக்கும்நிலையில் உண்மையில் புகார் அசா.1 தெரிவித்ததின்அடிப்படையில் எழுதப்பட்டதா அல்லது அசா.2 சாட்சியமளித்த வகையில் போலிசாரால் தெரிவிக்கப்பட்டு எழுதப்பட்டதா, எதிரிகள் தான் அசா.1, 2 ஐ தாக்கினார்களா என்ற சந்தேகம் எழுகிறது. அசா.2 எதிரிகளை குற்றசம்பவத்துடன் தொடர்புபடுத்தி சாட்சியமளிக்கவில்லை.

15) பார்வை மகஜர் சாட்சியான அசா.3 முத்து, தனது சாட்சியத்தில், அரசுதரப்பு வழக்கையும், அவர் வழங்கியதாக சொல்லப்படும் ஆவணங்களையும் அனுசரித்து, சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒருநாள் மதிச்சியம் போலிசார் தனது

கடைக்கு எதிரே உள்ள பழனியம்மாள் வீட்டின் முன்பு வைத்து ஒரு சண்டை வழக்கு தொடர்பாக அந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்ததாகவும், அதற்கு தன்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றதாகவும், சாட்சியமளித்துள்ளார். மேலும் அசா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே சம்பவ இடத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றதா என்ற சந்தேகம் எழுகிறது.

16) வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லப்படும் அ.சா.2, சம்பவம் குறித்தோ, குற்றசம்பவத்தில் எதிரிகளை அடையாளப்படுத்தியோ, தொடர்புபடுத்தியோ சாட்சியமளிக்காதநிலையில் எதிரிகளால்தான் அசா.1க்கு காயம் ஏற்பட்டதா? அ.சா.2, சம்பவத்தை நேரில் பார்த்தாரா என்ற சந்தேகம் எழுகிறது. ஏனெனில் புகார் மற்றும் அரசு தரப்பு வழக்குப்படி அசா.1ஐ தகாத வார்த்தைகளால் பேசி, அடித்து காயப்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்ததாக குற்றச்சாட்டு உள்ளது. ஆனால் அசா.1, அ.சா.2 எதிரிகள் தங்களை தகாத வார்த்தைகளால் பேசி, அடித்து காயப்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக அசா.1, அசா.2 அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு புகாரில் உள்ள விபரங்கள் தங்களுக்கு தெரியாது என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் தான் தாக்கியிருக்க கூடும் என்று காவல்நிலையத்தில் சொன்னதாகவும், எதிரிகள் தங்களை தாக்கவில்லை என்பதை தெரிந்து கொண்டதாகவும், மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்கள்.

17) புகார்தாரரான அசா.1ம், வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லப்படும் அ.சா.2ம், குற்றசம்பவத்தில் எதிரிகளை அடையாளப்படுத்தியோ, தொடர்புபடுத்தியோ சாட்சியமளிக்காதநிலையில் எதிரிகளால்தான் அசா.1க்கு காயம்

ஏற்பட்டதா? அ.சா.2, சம்பவத்தை நேரில் பார்த்தாரா என்ற சந்தேகம் எழுகிறது. சம்பவத்தில் காயம்பட்டதாக சொல்லப்படும் அசா.1யே தனது சாட்சியத்தில், அரசுதரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு, வழக்கு சம்பந்தமாக எதுவும் தனக்கு தெரியாது என்றும், எதிரிகள் தன்னை தாக்கவில்லை என்று தெரிவிக்கும் நிலையில் எதிரிகள் குற்றசம்பவத்தில் ஈடுபட்டார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

18) வழக்கு பதிவு, எதிரிகள் கைது, சான்றுபொருள் கைப்பற்றியது மற்றும் புலன்விசாரணை குறித்து அசா.4 சார்பு ஆய்வாளர் முத்துகிருஷ்ணன் அரசு தரப்பு ஆவணங்களை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார்.

19) சாட்சிய சான்றாவணங்களை பரிசீலிக்கையில் சம்பவத்தில் காயம் அடைந்ததாக சொல்லப்படும் அ.சா.1 மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்தாக விசாரிக்கப்பட்ட அ.சா.2, ஆகியோர் அரசுதரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு, காயம் ஏற்படுத்திய நபர்கள் யார் என்று தங்களுக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.1 தனது சாட்சியத்தில், சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் தான் தாக்கியிருக்க கூடும் என்று காவல்நிலையத்தில் சொன்னதாகவும், அவர்கள் தாங்கள் சொல்லும்படி எழுதினால்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதாகவும், போலீசார் சொல்ல சொல்ல தனது மகன் எழுதியதாகவும், அதில் உள்ள விபரங்களை தான் சொல்லவில்லை என்றும், எதிரிகள் தன்னை தாக்கவில்லை என்பதை தெரிந்து கொண்டதாகவும், சாட்சியமளித்துள்ளார். அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1, அ.சா.2,ம் இந்த எதிரிகள் தான் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என எதிரிகளை அடையாளம் காட்டி சாட்சியமளிக்கவில்லை. யார் யார் என்னென்ன குற்றசெயல்களில் ஈடுபட்டார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை.

20) சம்பவதினத்தன்று எதிரிகள் அசா.1ஐ தாக்கியிருந்தால் அவர்கள் எதிரிகள் குறித்து நீதிமன்றத்தில் அடையாளப்படுத்தி சாட்சியம் அளிக்காமல் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. மருத்துவ சாட்சியத்தின்படி அசா.1க்கு காயங்கள் இருந்தது உறுதியான போதிலும், அது எதிரிகளால் தான் ஏற்பட்டது என்பதற்கு ஏற்றுகொள்ளதக்க சாட்சியங்கள் இல்லை.

21) குற்றசெயலில் எதிரிகளை தொடர்புபடுத்தும் ஒரே சாட்சி அ.சா.4 புலன்விசாரணை அதிகாரி ஆவார். அ.சா.4க்கு சம்பவம் குறித்து நேரிடையாக தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலேயே எதிரிகளுக்கு எதிராக இறுதிஅறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார். வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில் 28.03.2022ம் தேதி அன்று அசா.1க்கு காயம் ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. ஆனால் இவ்வழக்கு சம்பவத்தில் இந்த எதிரிகள்தான் ஈடுபட்டார்களா என்பதற்கு உறுதியூட்டும் சாட்சியம் இல்லை. உடனடியாக காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் சாட்சியங்கள் இல்லை.

22) சாட்சிகள் ஆவணங்களுக்கு முரண்பட்டுள்ளதால் அரசுதரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் உண்மையில் சொன்னவிதத்தில் தயாரிக்கப்பட்டதா அல்லது எதிரிகள்தரப்பில் தெரிவிக்கும்படி வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது. சம்பவயிட சாட்சிகள் மற்றும் புகார்தாரர் எதிரிகளை இவ்வழக்குடன் சம்பந்தப்படுத்தி சாட்சியம் அளிக்காததாலும், அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லப்படும் சாட்சியான அ.சா.2ம், அரசுதரப்பிற்கு ஆதரவாக பதிலளிக்காமல் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளதாலும், எதிரிகள் தான் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என எதிரிகளை அடையாளம் காட்டி எந்தவொரு தனிநபர் சாட்சியும் சாட்சியமளிக்காததாலும், இவ்வழக்கின் அரசு

தரப்பு சாட்சியான அ.சா.4 புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டுமே வைத்துகொண்டு எதிரிகள் தான் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

23) ஆகவே மேற்கண்ட ஆய்வுகளின் அடிப்படையிலும் அரசுதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலும் எதிரிகளுக்கெதிராக அரசுதரப்பில் சாட்டப்பட்ட வழக்கு குற்றச்சாட்டுக்களை அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் உரிய முறையில் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதி, இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கவேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிரிகள் அசா.1ஐ அவதூறான வார்த்தைகளால் பேசியதாகவோ அசா.1யோ ஏனைய சாட்சிகளோ அறுவறுப்பு அடைந்ததாக சாட்சியங்கள் இல்லை. எதிரிகள் அடித்து காயப்படுத்தியதாகவோ, எதிரிகள் அசா.1ஐயோ உடனிருந்தவர்களையோ கொலை மிரட்டல் விடுத்ததாகவோ அதனால் சாட்சிகள் அச்சப்பட்டதாகவோ தொடர்அச்சத்தில் இருந்ததாகவோ சாட்சியங்கள் இல்லை.

24) அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் மூலமாக எதிரிகள் மீது சுமத்தப்பட்ட பிரிவு 294(b),323,324,506(ii) IPC படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக, எதிரிகள் பிரிவு 294(b),323,324,506(ii) IPC. படி குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து குவிமுச பிரிவு 248(1)-இன்கீழ் மேற்படி குற்றச்சாட்டிலிருந்து இந்நீதிமன்றம் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. R.P.R No.695/22ல் தாக்கல் செய்யப்பட்ட சிறிய கல் ஒன்று.**

**பயனற்றது என்பதால் அரசுதரப்பில் மேல்முறையீடு செய்யவில்லை என்றால், மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு புலன் விசாரணை முகமையிடம் கொடுத்து அழிக்க உத்தரவிட்டும், அரசு மேல்முறையீடு செய்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுப்படி செயல்பட இதன்படி உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் எழுதிகொடுத்த பிணைமுறி ஆவணம் மேல்முறையீட்டு காலத்திற்குபின் ரத்து செய்து உத்திரவிடப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் பதிவு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு, இன்று 01.11.2023 தேதியில் இந்நீதிமன்றத்தால் அவையோர் அறிய பகரப்பட்டது.

**(Sd.)S. கல்யாணமாரிமுத்து.**

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மதுரை.**

**<u>அரசுதரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா.1 -திரு. பழனியம்மாள் (புகார்தாரர்)

அ.சா.2 -திரு. சூர்யா

அ.சா.3 -திரு. முத்து

அ.சா.4 -திரு. முத்துகிருஷ்ணன் (புலன்விசாரணை அதிகாரி)

**<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.சா.ஆ-1. புகாரில் உள்ள அசா.1ன் கையெழுத்து

அ.சா.ஆ.2- புகாரில் உள்ள அசா.2ன் கையெழுத்து

அ.சா.ஆ.3- பார்வை மகஜர்

அ.சா.ஆ.4- புகார்

அ.சா.ஆ.5- முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ,6- மாதிரி வரைபடம்

அ.சா.ஆ,7- அத்தாட்சி

அ.சா.ஆ,8- படிவம் 91

அ.சா.ஆ,9- விபத்து பதிவேடு

**அரசுதரப்பு சான்றுபொருள்: இல்லை.**

**எதிரிதரப்பு சாட்சி, சான்றாவணங்கள், சான்றுப்பொருள்கள் - இல்லை**

குறிப்பு:-1) வழக்கு முடிவு பற்றி போலீஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

2) எந்த சாட்சியும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு விசாரணை சமயத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

4) வழக்கு சொத்து பற்றி உத்திரவிடப்பட்டுள்ளது.

// உண்மைநகல் //

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மதுரை.**